செய்தி வெளியீடு எண்:1033

## செய்தி வெளியீடு – 23.11.2010
## அனைத்துப் பேரூராட்சிப் பகுதிகளிலும் ‘‘கலைஞர் வீடு வழங்கும் திட்டம்’’! தமிழக அரசு அறிவிப்பு!

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் தலைமையில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் முன்னிலையில், ‘‘கலைஞர் வீடுவழங்கும் திட்டம்’’ சம்மந்தமான ஆய்வு இன்று (23.11.2010) புனித ஜார்ஜ் கோட்டையில் நடைபெற்றது.

இந்தத் திட்டத்தின்கீழ் இதுவரை 4 ஆயிரத்து 63 வீடுகள் நிறைவு பெற்றிருப்பது அறிந்து முதல்வர் கலைஞர் தொடர்புடைய அதிகாரிகளுக்கும், பயனாளிகளுக்கும் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்தார். இந்த ஓர் ஆண்டிலேயே – கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி, சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், திண்டுக்கல், தேனி, மதுரை, கரூர், திருப்பூர், கோயம்புத்தூர், நீலகிரி – ஆகிய 13 மாவட்டங்களில் கணக்கெடுக்கப்பட்ட குடிசைகள் அனைத்தும் ‘‘கான்கிரீட்’’ வீடுகளாக மாற்றப்பட்டு வருகின்றன.

மேலும், அனைத்து ஊராட்சிப் பகுதிகளிலும் தற்போது தொடங்கப்பட்டு நடைபெற்றுவரும் ‘‘கலைஞர் வீடுவழங்கும் திட்ட’’த்தை; தமிழகத்தில் உள்ள அனைத்துப் பேரூராட்சிப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்துவது என்றும்; பேரூராட்சிகளில் உள்ள குடிசைகளைக் கணக்கெடுத்து, அடையாள அட்டைகள் வழங்குவதென்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

உதகமண்டலம், கொடைக்கானல் போன்ற மலைப் பிரதேசங்கள், குளிர்ப் பிரதேசங்கள் என்பதால், அந்தப் பகுதிகளில் வாழும் ஏழையெளியோர் ஓலைக் குடிசைகளுக்குப் பதிலாக, தகரத்தாலும், பிளாஸ்டிக்காலும் வேயப்பட்ட சிறு வீடுகளில் வாழ்ந்து வருகிறார்கள். சிறப்பு நேர்வாக, மலைப் பிரதேசங்களில் ஏழையெளியோர் வாழ்ந்துவரும் இத்தகைய வீடுகளையும் கணக்கெடுத்து, அடையாள அட்டைகள் வழங்குவதென்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

‘‘கலைஞர் வீடு வழங்கும் திட்ட’’த்தின்கீழ், தமிழகத்தில் குடிசை வீடுகளே இல்லை எனும் புதிய வரலாற்றைப் படைப்பதற்காக, தமிழகத்தின் ஊராட்சிப் பகுதிகளில் உள்ள 21 இலட்சம் குடிசை வீடுகளை, தமிழ்நாடு அரசின் முழு நிதி உதவியுடன் 6 ஆண்டுகளில் ‘‘கான்கிரீட்’’ வீடுகளாக மாற்றித் தருவது என்றும்; முதல் கட்டமாக இந்த ஆண்டில்(2010–2011), 3 இலட்சம் குடிசைகளுக்குப் பதில், புதிய ‘‘கான்கிரீட்’’ வீடுகளைக்

**கட்டுவதற்காக ஒவ்வொரு வீட்டிற்கும் 75 ஆயிரம் வீதம் மானியமாக வழங்கிட ஏற்கனவே முடிவு செய்து, அதன்படி 3 இலட்சம் "கான்கிரீட்'' வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. வீடுகள் அனைத்தும் 2011, ஜனவரி மாதத்திற்குள் நிறைவுறும்.**

**இன்று நடைபெற்ற கலந்தாலோசனைக் கூட்டத்தில், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு, தமிழக அரசின் தலைமைச் செயலாளர், நிதித்துறை முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர், பேரூராட்சிகள் இயக்குநர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.**

**.........................................................................**

**வெளியீடு:–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**